[illegible], 1929

72
Y31m2,N26
N29.4.3
199380

Regd, No. 2169. Vol. IV

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிட்டர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி ...

ஆபீஸ்: 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV] மார்ச்சு 1929 [நெ. 3

THE REGISTRAR OF ... No. 12 APR 1929 ... RAS

பொருளடக்கம்.

நெ. பக்க

20. ஜப்பான் தேசத்தில் க்ஷீணதசை யடைந்த ஓர் கிராமத்தின் வரலாறு.

21. நாட்டின் பாகங்களில் நண்ணினேன் கண்டது காட்சி.

22. கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்களின்

23. வர்த்தமானக் குறிப்பு.

24. செடிகள் உயிருள்ளவையே.

25. பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் வி

**Annual Subscription (inclusive**

**Inland Rs. 3: Foreign I**

**Single copy, Inland As. 6, F**

**Rural India reaches the Villages a**

**It is the best medium for ad**

# SADHANA

# AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ண ஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4—0—0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. பித்தம் ...தலிய வியாதிகளைப்போக்குவதுடன் ரத்தசுத்திக்கும்

சரிபாடி ஸரஸா ;

...ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரி

விலை ஒருசேர் ரூ 3—0—0

சுக்ர ஸஞ்சீவி

...நறைவு, அபோகத்தன்மை, சுவப்பனஸிகதம், ...க்கு அமிர்தம் போன்ற மருந்து.

... : சேர் 1க்கு ரூ 16—0—0

அபல பந்தய ஜகா.

...க்கு உண்டாகும், இடுப்புநோய் ... வியாதி அகாலமாதவிடாய் முதலிய ...ாக்கும்.

50-டோஸ் ரூ. 5

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ்: 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV] மார்ச்சு 1929 [நெ 3


## ஜப்பான் தேசத்தில் க்ஷீணதசையடைந்த ஓர் கிராமம் செல்வ நிலையை யடைந்த வரலாறு.

ஜப்பான் தேசத்தில், ஒகயாமா மாஹாணத்தில் உகன்முரா என்ற பெயரை யுடைய ஓர் சிறிய கிராமமிருக்கிறது. அந்தக்கிராமமானது அநேக கஷ்டங்களை அநுபவித்து வந்து கடைசியில் தரித்திர நிலையை யடைந்தது. இக்கஷ்டங்களுள் வெகு துயரமானது 20 வருஷங்களிற்குமுன் ஸம்பவித்தது. மூன்று செல்வமுள்ள குடும்பங்கள் க்ஷீணித்துப்போய்விட்டன; அவைகளுக்குச் சொந்தமாயிருந்த நிலங்கள் பராதீனமாயின. ஸாடோ, ஷோயா, ஸாடோவின் பிரிவு என்ற இந்த மூன்று குடும்பங்களும் வாழ்ந்த காலத்தில் அவைகளுக்குச் சொந்தமாயிருந்த இதரக் கிராமங்களிலிருந்து உகன்முராவானது பிரதி வருஷமும் 3500 மூட்டை அரிசியை அடைந்து வந்தது. இந்தக் குடும்பங்கள் கஷ்ட தசையை அடைந்தவுடன் உகன் முராவிற்கு அரிசிவருவது நின்றது. மேலும், உகன் முராவே 1500 மூட்டை அரிசியை பிரதிவருஷமும் வெளியில் அநுப்ப வேண்டியதாக நேரிட்டது ஆகவே, கிராமத்தின் உற்பத்திக்கு அதிகச்செலவு ஏற்பட்டுவிட்டது. குடிகளுக்கு வெகு தொந்திரவுகள் ஏற்பட்டுவிட்டன. இப்படி இருக்கையில் கடவுளின் கிருபையால் கனெவகா வென்றும், நாகயாமாவென்றும், ஹிருடாவென்றும் மூன்று திறமைவாய்ந்த தலைவர்கள் கிராமத்தில் தோன்றினார்கள். உகன்முராவை தரித்திர நிலையிலிருந்து உயர்த்திச்செல்வ நிலைக்குக்கொண்டு வரவேண்டிய நோக்கங்கொண்டு மூவரும் கூடி ஆலோசித்த பின்பு அடியில் கூறப்பட்ட ஐந்து தீர்மானங்களைக்கொண்டனர்:—(1) உகன்முரா கிராமத்தின்

ஜனங்கள் யோக க்ஷேம செலவுகளை சிக்கனமாகச்செய்து கொண்டு பணங்களை மீத்திக்கொண்டு விருத்தி செய்யவேண்டும்; (2) கிராமத்திலுள்ள ஆண்மக்கள், பெண்மக்கள், சிறுவர்கள் வயது வந்தவர்கள் யாவரும் கல்வியைக் கற்கவேண்டும்; (3) ஒவ்வொருவரும் யோக க்ஷேமவழியில் பிறருடைய சஹாயத்தை எதிர்பார்க்கக்கூடாது, பிறருக்கு சஹாயத்தைச் செய்ய வேண்டுமென்கிற உணர்ச்சியுடன் இருக்கவேண்டும்; (5) எல்லோரும் சரீரப்பயிர்ச்சிகளை அப்பியஸித்து பலமுள்ளவர்களாகவேண்டும்.

மேற் சொல்லிய 5 தீர்மானங்களும் நிறைவேற வேண்டிய நிமித்தம் 3 தலைவர்களும் ஸங்கங்களை உண்டாக்கினார்கள். குடும்பத் தலைவர்களின் போதனைக்காக ஒரு ஸங்கமும், குடும்பங்களின் யெஜமானிகளுக்காக வொன்றும், வயதுவர்களின் போதனைக்காக வொன்றுமாக உண்டாக்கப்பட்டன.

1910-ம் வருஷத்தில் தலைவர்கள் ஒரு கூட்டுச்சங்கத்தை ஏற்படுத்தினார்கள். 368 பெயர்கள் சேர்ந்தார்கள்; 9430 யென்கள் சேர்க்கப்பட்டன. தற்போது அச்சங்கத்தில் 1531 பெயர்கள் அங்கத்தினர்களாக விருக்கிறார்கள். மூலதனமும் 10000 யென்களாக பெருகியிருக்கிறது. கிராமத்தில் பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் பிறந்த 23-ம் நாளில் சேர்க்கப்படவேண்டுமாம். மூலதனம் இன்னமும் உயர்த்தப்படுமாம். பங்கு ஒன்று 50 ரூபாயாக விதிக்கப்படுமாம்.

கூட்டுச்சங்கத்தினால் மிகுந்த நன்மைகளும் லாபங்களும் விளைந்திருப்பதைக்கண்டு தலைவர்கள் கிராமக்காடுகளை ஒன்றுசேர்த்து அபிவிருத்திசெய்ய ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் காடுகளின் சொந்தக்காரர்கள் தங்களுடைய உரிமைகளும் சுதந்திரங்களும் குறைந்து போகுமோவென்கிறபயத்தினால் தலைவர்களின் முயர்ச்சிகளுக்கிணங்கவில்லை. தலைவர்கள் பின்வாங்காமல் அவர்களுக்கு மேலுக்கு மேல் போதித்து ஏற்படக்கூடிய நன்மைகளை எடுத்துக்காட்டினார். அதன் பின்பு காடுகளின் சொந்தக்காரர்கள் உற்சாகத்துடன் ஒப்புக்கொண்டார்கள். கிராமத்திற்கு 15000ஏகராக்கள் விஸ்தீர்ணமுள்ள பொதுக் காடு ஏற்பட்டது. இந்தப்பொதுக் காட்டிலிருந்து வருஷத்திற்கு 4000யென்கள் பெறுமான வரும்படி உண்டாகிறது. இந்த வரும்படி



10,000 யென்களாகவும் விருத்தியாகக்கூடுமாம். இன்னமும், கிராம ஜனங்கள் இக்காட்டிலிருந்துத் தங்களுக்கு வேண்டிய குளிர்காலச் சௌகரியங்களையும் அடைகிறார்கள்.

ஸாடோமுதலிய மூவர்களின் குடும்பங்கள் க்ஷீணத்தையடைந்து அவர்களின் நிலங்கள் விற்பனையாகும் நிலைமையிலிருக்கையில் அந்நிலங்களை வாங்கக் கூடியதக்கதனிகர்கள் உகன் முராவில் இல்லை. அந்நிலங்கள் இதரக்கிராமங்களின் ஜனங்களுக்குப் பராதீனமாகும் பக்ஷத்தில் உகன் முராவின் ஜனங்களுக்குத்தங்களுடையபயிர்முயர்ச்சிகளுக்காக நிலம் போதாமல் போகுமே என்கிற பயம் இருந்தது. கிராமத்தில் உற்பத்தியும் குறைந்து விடுமே என்றும் அவர்கள் பயந்தார்கள். மேலும் அந்நியகிராம ஜனங்களிற்கு அந்த நிலங்கள் சொந்தமாகும் பக்ஷத்தில் பின்பு தாங்கள் அவைகளைத் திருப்பிக்கொள்ள முடியாதென்றும் நினைத்தார்கள். ஆகவே, நிலங்கள் அந்நியர்களுக்குச்சேர்வதைத் தடுத்து அவைகளை உகன் முராவின் ஜனங்களே அநுபவிக்க வேண்டிய நோக்கம் கொண்டு தலைவர்கள் ஆலோசனைகளைச் செய்து ஒரு வியவஸாய பாங்கிலிருந்து 84000 என்களை கடன்வாங்கி அதைக்கொண்டு 800 ஏகரா நஞ்சை நிலங்களையும், 250 ஏகரா புஞ்சை நிலங்களையும், 42 மனைக்கட்டுகளையும் வாங்கினார்கள். மேற்கூறிய கடன்தொகையை கிராமத்தவர்கள் அனைவரும் பாத்தியப்பட்டே வாங்கினார்கள். பொதுவில் இவ்விதமாக வாங்கப்பட்ட நிலங்கள் தனிநபர்களுக்கு அவர் அவர்களுக்கு வேண்டிய அளவுகளில் வாங்கின விலைப்பிரகாரமே விற்கப்பட்டன. இம்மாதிரி நடத்திய விற்பனைகளால் வாங்கின கடன் தொகையை அடைக்க பணம் உண்டாயிற்று. கடன் அடியோடே அடைந்தது; நிலமும் கிராமத்தார்களிடத்தில் சேர்ந்தது; தவிரவும் கிராமத்தின் பொது ஸொத்தாக 200 ஏகரா சாகுபடி நிலம் மீந்தது.

1918-ம் வருஷத்தில் உகன்முராவின் கிராமஅதிகாரியும், உதவி அதிகாரியும் மாறநாச பயாஷியும் ஹிருடாவும் ஒன்றுகூடி கிராமத்தில் ஏற்படக்கூடிய செலவுகளை நடத்துவதற்காக ஒரு நிதியைச் சேர்த்து வைக்க எத்தனித்தார்கள். கிராமத்தார் ஏற்கனவே தலைவர்களின் முயர்ச்சிகளால் அளவற்ற நன்மைகள் விளைந்திருக்கிற காரணம்பற்றி அவர்களோடு ஒத்துழைத்து நிதிக்காகப் பணங்கொடுத்து ஒத்தாசைகளைச் செய்தார்கள், 32 யென்கள் சேர்ந்தது. உகன் முரா

19938

யில் 600 குடும்பங்களுக்கு மேல் இல்லை. ஆகையால் இந்த நிதி போதுமானதாக விருந்தது.

தங்களுடைய முயற்சிகள் இவ்வாறு பயன்பட்டமையால் தலைவர்கள் கிராமத்தாரிடத்திலிருந்து 2½ லக்ஷம் யென்களை வசூலித்துச் சேர்த்துக் கிராமத்தில் ஒரு சாராய ஆலையை ஏற்படுத்தினார்கள். அந்த ஆலையானது கிராம ஜனங்களுக்கு வேண்டிய சாராயத்தை உண்டாக்கியதோடு அந்நியக் கிராமங்களில் விற்பனைக்காகவும் மேல் கொண்ட அளவுகளில் சாராயத்தை உண்டுபண்ணிற்று. தற்போதில் பங்குக்காரர்களுக்கு ஆலையிலிருந்து அதிகலாபம் ஏற்படுவதோடு 6600 யென்கள் கிராமச்சிலவுகளின் நிமித்தம் அதன் மூலமாகவே பிரதி வருஷமும் வருகிறது. கிராமப்பொது நிதி 5லக்ஷம் யென்களாகப் பெருகியிருக்கிறது. கிராமத்தின் சிலவுகள் எல்லாம் இந்நிதியிலிருந்து நடத்தப்படுகின்றன.

உகன் முராவில் கிராம ஜனங்கள் குத்தகைக்காரர்களின் சம்பந்தமில்லாமல் தாங்களே வியவஸாய முயற்சிகளை நடத்துகிறார்கள். ஆகையால் அவர்கள் நல்ல வரும்படிகளையடைந்து யோகக்ஷேம சிலவு போகப்பணங்களை மீத்திச் சேர்த்துக்கொண்டு அதிகமாய் நிலங்களை வாங்கிக்கொள்கிறார்கள். முன்காலத்தில் பராதீனமாகிய நிலங்களை யெல்லாம்கூட வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

1922-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் கிராமத்தார் 2½ யென்களைச் சிலவழித்து தாங்களே உழைத்து ஒரு ஏரியைக்கட்ட ஆரம்பித்தார்கள். 1930-ம் வருஷத்தில் இந்தஏரி கட்டி முடிவாகும். இந்தஏரி ஏற்படுவதால் 2500 ஏகராநிலம் அதிகமாகச் சாகுபடி செய்யக்கூடுமாம். சீக்கிரம் வேலைமுடிவாகும் பக்ஷத்தில் அதிக நிலங்கள் ஏரி வேலையில் அமைந்திருப்பவர்களுக்கே விற்கப்படவேண்டுமென்று கிராமத்தவர்களுள் ஒரு தீர்மானம் நடந்தேறிய படியால் அவர்கள் வெகு வேகமாய் வேலையை நடத்தி வருகிறார்கள். மேலும், நிலங்களை வாங்குவதற்காகத் தங்களுடைய கூலிப்பணங்களை வீண் சிலவு செய்யாமல் முக்கிய சிலவுகளை நடத்திக்கொண்டு சிலவு போக மீந்த பணங்களை கிராமத்தலைவர்களிடத்திலேயே ஒப்பிவித்துவைத்து வருகிறார்கள்.



உகன் முராவில் 69 ஆலயங்கள் பல இடங்களில் இருந்தன. கிராமத்தார் அவர் அவரிஷ்டப்போல் அவர் அவருக்குப் பிடித்த ஆலயத்தில் தொழுது வந்தனர். ஒரே பெரிய தேவாலயத்தைக் கட்டி அதில் தான் எல்லோரும் ஒன்று சேர்ந்து தேவனை தொழ வேண்டுமென்று அவர்களுடைய விகஸித்த புத்திக்குத் தோன்றியமையால் உகன் முராவின் ஜனங்கள் அந்தப்படியே ஒரு பெரிய ஆலயத்தைக்கட்டி அதிலேயே எல்லோரும் தொழுகிறார்கள்.

உகன் முராவின் ஜனங்கள் எல்லோருக்கும், ஆண்மக்கள் பெண்மக்கள் சிறுவர் பெரியவர் எல்லோருக்கும் கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உயர் படிப்பு கல்விச்சாலைகள் எல்லோருக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சில வருஷங்களுக்கு முன் கிராம ஜனங்கள் ஒரு பெரிய மீன் ஸ்தலத்தை வைத்துக் கொண்டு மீன் வியாபாரத் தொழிலை நடத்தி வந்தார்கள். ஸாடோக்கள் க்ஷீணத்தை யடைந்தமையால் இந்த ஸ்தாபனத்தின் முயற்சிகளுக்குக் நஷ்டம் வந்தது கொஞ்சம் கொஞ்சமாய் நஷ்டங்கள் ஏற்பட்டு மொத்தத்தொகை சில வருஷங்களுக்குள்ளேயே 4500 யென்களாகப் பெருகிவிட்டன. உடனே உகன்முராவின் வாலிப சங்கத்தார் அந்த ஸ்தாபனத்தின் நிர்வாஹத்தை ஏற்றுக் கொண்டு முயற்சி செய்து அதை லாபவழியில் அமைத்தார்கள். சென்ற 7 வருஷங்களுள் அவர்கள் கடன்களை அடைத்து நஷ்டங்களுக்கு ஈடு செய்து 4004 யென்களை இருப்பாக வைத்து நிதியாக ஏற்படுத்தினார்கள். அந்நிதியைக் கொண்டு ஒரு கிரந்த வாசக சாலையை உகன் முராவில் அமைத்தார்கள்.

கிராமத்திலுள்ள பிள்ளைகளும் பெண்களும் பயிர் வேலையை அப்பியஸித்து வருகிறார்கள். அவர்களின் முயற்சிகளுக்காக ஒவ்வொருவருக்கும் பிரத்தியேக பயிர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கல்யாணமாகாத பெண்களுக்கென்று ஒரு ஸங்கம் கிராமத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. நல்ல நெறியையும் குணங்களையும் அவர்கள் வளர்க்க வேண்டிய நிமித்தம் இந்தச்சங்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உயர்வான நடத்தைகளையநுஸரிக்கிற பெண்களுக்குப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

உகன் முராவில் 560 குடும்பங்கள் தான் இருக்கின்றன. ஜனசங்கியை 3300 தான். அது சிறிய கிராமம் தான். ஆனால் கிராமத்தவர்கள் அதை நிர்வஹிக்கிற சீரும் அவர்களுடைய விவேக வழிகளும், முன்னேற்றமுயர்ச்சிகளும்வெகு உயர்வானவை. 1922ம் வருஷத்தில் ஜப்பான் தேசத்துக்கல்வி மந்திரியவர்கள் உகன் முராவின் ஜனங்களின் முயர்ச்சிகளைப்பற்றி வெகு உயர்வாகப் புகழ்ந்து பேசினார். 1926-இல் ஜப்பானின் அரசர் அந்தப் பிரதேசத்தின் பக்கமாய்ச் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொழுது உகன் முராவிற்கு தன்னுடைய பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒருவரையனுப்பி, அதில் நடைபெறும் முயர்ச்சிகளைக் கவனித்துப்பார்த்து பிறகு அவைகளைப்பற்றி தன்க்கு எழுதவேண்டுமென்று உத்திறவு செய்தனர். அந்தப்பெரிய உத்தியோகஸ்தர் அப்படியே அவைகளை நேரே பார்த்து ஆனந்தத்தை அடைந்து அரசருக்கு வரைந்தார். அரசர் கொண்ட சந்தோஷத்தைச் சொல்ல முடியாது. தன்னுடைய சந்தோஷத்தை கிராமத்தாருக்கு அவர் தெரிவித்தார். உகன் முராவின் ஜனங்கள் தங்களுக்கு இவ்வித கௌரவம் ஏற்பட்டதைப்பற்றி அடைந்த பெருமை இவ்வளவு அவ்வளவு இல்லையாம்.

## நாட்டின் பாங்கற் நண்ணினேன் காண்பது.

(By K. R. R. சாஸ்திரி, Advocate and M. துரைப்பிள்ளை.)

### III. கிராம காட்சி.

நம்மவர்களில் சிலர் கிராம வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளான் ஒருவனைக் கேவலமாக மதித்துத் தாழ்வு படுத்துகின்றனர். பண்டைய கொள்கைகளும், சீரமே திரவியமாகக் கொண்ட ஆற்றலும், வாய்மையே பூஷணமாகப் பெற்ற பெரு நலனும், இன்னும் பட்டிக்காடெனப்பகரும் கிராமங்களில் காணலாகும். வெகுண்ட நிலைமையோடு காணப்படும் நம்கிராமத்தானது உயரிய நிலையை அந்நியர் எவரும், உடுப்பின் மாற்றமே உயரிய நோக்கங்கட்கறிகுறியென என்னும் வரைக்கும் ஒரு சிறிதும் அறிதற்கியலார். கிராமத்தான் என்ற எண்ணம் உண்டான உடனேயே மனிதவாழ்க்கையில் மிகத் தாழ்ந்த படிகளில் உள்ளவனாகக்கருதப்பட்டு பலபல இழிந்த கட்டுரை கட்காளாகிறான். அமெரிகக நாட்டு யாத்திரிகள் நம் ஆட்டம்பரம் அற்ற வாழ்வில் நிலைத்துள இவர்களை வெகு எளிதாக எண்ணி விடு



கின்றனர். எது தாழ்வோ, பயனற்றதோ, எது முன்னேற்றத்திற்குத் தடையாய்த் தோன்றுவதோ, அத்தகைய ஒன்றிற்கு இவர்களைக் கொணர்ந்து விடுகின்றனர். மேலும், இக்கிராம வாசிகளைத் தற்கால பயனற்ற படிப்புடைய கற்றவரென்போர் கிள்ளுகீரையென மதித்து எள்ளி நகையாடுகின்றனர். உண்மையில்பலர் நகைத்து எளனம் செய்தற்கான கேவலமானவர்தாமோ இவர்கள்.

### ஓர் நாள் வாழ்க்கை.

உயர்தரக் கல்வி போதிக்கும்மாபேர் கல்லூரிகள் நிலைத்துள ஆக்ஸ்போர்டு, கேம்ரிட்ஜ் போன்ற இடங்களில் தங்கி வாழ்வதாம் எனின் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கிட்டி நெருங்கி முந்துவர் ஆயின் ஓர் சிறுநாள் தென்னிந்திய கிராமத்தானுடன் நிற்க எவர் இசைவர் என்பதே ஈங்குள ஆசங்கை பெரியாரைப் பிழைபடும் பெரும் பிணிக்கு கிராமாந்தரங்கட்குச் சென்று ஆங்குள வாழ்க்கையின் மேன்மையாகிய சர்வரோக நிவாரணமே உயரிய குணந்தரும் இயல்புடையது. ஆம்— இதோ எத்தகைய இடுக்கணையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலும் அதற்கேற்ற கட்டுடைத்தேக முந்துவ்லிய ஆடையும் தோன்ற நிற்கின்றான் ஒருவன்—அதோ, அவ்விடத்தில் மெலிந்த உருவோடு, குறுகிய நிலையில் வேண்டற்பாலன அல்லா அங்கிபலவும், அழகென நினைக்கும் கழுத்துப்பட்டையும் அதற்கேற்ற மயிர்க்கத்தரிப்பும் காலுக்குப் பூட்சும் விளங்கத்தோன்றுகிறான் ஓர் வாலிபன். என்னே ஈது! நாகரீகமென்பதும் ஆடையின் பெருக்கோ? அல்லது, அமயத்துக்கமையம் தன்னிலைமாறி ஓடும் பாவனைவாழ்வோ? அல்லது அங்குமிங்கும் ஏதோசிறிதுணர்ந்த ஆங்கில மொழியின் திவ்விய ஞானமோ? அதுவன்றி மேனாட்டார் என்பார் பெற்றமாபேர் நாகரீகக் கொள்கை பலவும் பின்பற்றும் பாங்கோ; யாதோ அறிகிலம்! இத்தகைய நிலையில் ஆடம்பரமற்ற வாழ்க்கையில் ஈடு பட்டுள பட்டிக்காட்டான் எனப்படும் ஒருவன் எத்தகைநிலை பெற்றிருக்கின்றான் என்பதை அறிவோம்.

கங்குற்போதிலே படுக்கைவிட்டெழுந்து அருகிலுள்ள ஆற்றிற்குச்சென்று தம்காலைக்கடன் முடித்து எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளது நாமத்தை உச்சரித்த வண்ணம் தூய்மையே உருவாத் தோன்றும் தம் சிற்றில் புகுவர், ஆங்கு அநுபவஞான முதிர்ந்த மூதாட்டி நின்று ஆவன செய்து கொண்டிருப்பள். நம்மவர்கள்

வீடுகளில் மனுஷ இயல்பிற்குரிய பெருமிதத்துடன் வயதிற்கேற்ற அநுபவத்துடன் அருங்காரியங்கள் பலசதா செய்து கொண்டிருக்கும் பெரும் பாட்டிகட்கு ஒப்பார் இவ்வுலகில் இல்லையெனலாம்.

நண்பகல் கிட்டும் சமயம் விருந்தினர் இருப்பின் அவரை உண்பித்துத்தானுமுண்பர். மந்தை திரும்பும் வேளை இல்லத்தருக்கெவரேனும் ஒருவர் தம் வயல் சென்று படியாள் புரிந்த அன்றைவேலையைக் கவனிப்பர். இவையே அல்லாது கிராமப்பள்ளி நிறுவிய தனை நல்வழி நடத்தலிலும் ஏரி, குளம் முதலிய நீர்ப்பாசன சௌகர்யங்களைக் கவனித்து நீர் பங்கிட்டுத் தருதலிலும், சிறு சிறு அடிபிடி சண்டைகளை, நீக்கிவேண்டுவன செய்தலிலும், காடு திருத்தல் புல் மேல் பொது விடம் ஐக்கியச் சங்கங்கள் முதலிய பொது நலக்காரியங்களிலும் ஈடுபட்டு செய்வன செய்வார். மாலை வேளைகளில் அரிய புராண இதிகாசங்களைக்கேட்டு இன்புறுவர். நல்லிரவுநணுக தத்தம்தொழில் நிறுத்தி ஆண்டவன்பாதமே அருந்துணை யெனக்கொண்டு தம் துயிலிடமடைகுவர்—தொன்மைவாழ்க்கையின் துரிலைதன்னை இன்னும் 3 லக்கத்திற்கு எடுத்துக் காட்டாக் விளங்கிநிற்பன நமது அமைதிநிலவும் கிராமாந்தரக் குடும்பங்களே!

## கிராமத்தவனும் வெளிப்பிரதேசமும்.

இன்னுஞ்சில கிராமங்களில் உள்ளவர்கள் உப்பு, தீக்குச்சி, மண்ணெண்ணெய் முதலிய அவசிய பண்டங்கள் நிமித்தம் தம்மூர் விட்டு வெளியே, பட்டணங்கட்கு வருகின்றனர் என்பது உண்மையே; ஆயினும், உயர்தரக்கல்வி பெறும் பொருட்டு பட்டணங்கட்குச் சென்று திரும்பும் மாணவர்களின் தொகையும் இதுகாலம் அதிகப்பட்டு வரும் நியாயமன்றங்களின் கணக்கும், உயரிய ஆடைகட்கு உண்டாகியிருக்கும் விருப்பத்தின் பெருக்கும், வாசனைதரும் சௌக்காரமும், இன்னும்வேண்டும்பல தற்கால அவசியசாமான்களும் நிறைந்துள சிறு சிறு கடைகளும், பிரகிருமங்கள் எவ்வாறு வாழ்க்கையில் உயர்ந்து வருகின்றன என்பதை எண்பிக்கும். மூனைந்து ஆண்டுகட்கு முன்னர் எம்போன்றோர் எழுதுகோலும் (Pencil) இறகும் (Nibs) பெறுதல் முடியாதிருந்தது; தற்போதோ எந்தக் கிராமக் கடைகளிலும் சீப்பு, கண்ணாடி, வாசனைத்தைலம், சோப்பு, அமிர்தாஞ்சனம் முதலியவை பெறஏது உண்டாயிருக்கிறது.



இத்துடன் கிராமவாசிகளுக்கு, உலக ஞானம் இல்லையென முடிவு செய்வதோ? 1911ம் ஆண்டின் பிற்காலத்திருந்து (Durbar day) நம்சக்கிரவர்த்தியின் நாமத்தை நனகு அறிந்துளர் தன்னிளங்குமாரி தன் குமுதவாய் திறந்து அருட்டிறம் விளங்க இசைத்த அருட்பாக்களை இன்னிசையொடு இசைக்காளோ என்று எண்ணுங்கால் எல்லாம், "மன்னன் வாழ்கவே! நமது மகிபன் வாழ்கவே" என்னும் பாடலைப் பன்முறை கேட்டின் புற்றிருக் கின்றனன்; கடந்தமாபோர் உலகயுத்தம் ஜெர்மனியின் மட்டிலா வன்மையை ஒவ்வொரு கிராமத்தாரும் உணருமாறு போதித்திருக்கிறது; சண்டையின் ஒவ்வொருதின மாறுதல்களையும் பட்டணத்திலுள்ளவர்களைக்காட்டிலும் கிராமத்தவர்களே நன்கு அறிந்திருந்தனர். உலகில் பாழும் பேராசையும், பிறரைப்பற்றி போட்டி போடும் தீயகுணமும் இருக்கும்வரை சதாசண்டைநடந்தவாறே இறக்குமென அவர்களும் தெரிந்திருக்கின்றனர்

## கிராமத்தவரியல்

ஆகவே, தென்னிந்திய கிராமவாசி கடவுட்கும் பயந்து நடக்கும் பக்திமான்; பிறர் எண்ணுமாப் போலவன் வெருண்டு திரியும் மிருகமன்று. தனக்கு அவசியமென இருக்கும் கிருஷிகத்தொழில் ஒன்றையேபெரிதுங்கைப் பற்றிவாழ்பவனாக இருந்தும் தம்பொருள் தனைப் போற்றிவாழும் குணமுடையவன். இயற்கையில் பிறர்க்குதவிசெய்யும் சுபாவம் உள்ளவன்; எனினும் முன் பேரந்து ஆவலுடன் நம்மைக் குறித்தடைவ இவையென தெரியாதிருக்கையில் அறிமுகம் கொள்ள இசையான். சட்டைக்காரன் என உடை உடுத்து கிராமங்கட்குச் செலில் கிராமச் சிறுவர் பலர் கிட்டுவந்து நோக்குவர்; இது அவர்களது நடை உடைகட்கு மாறாகத்தோன்றும் புதுமையினாலேயேயன்றி பிறிதொன்றாலல்ல, இச்சிறுவர் நாம் கல்லூரிகளில் அரிதிற் படித்துத் தெரிந்த நுட்பமான காரியங்களை நான்னியதில் தங்களது அனிபவ அறிவால் வெகு சுலபமாக நமக்கெடுத்துக் காட்டுவர். வெளியுலகின் இயல் இதுவாமெனத்தம்வரை நன்குணர்ந்து நடக்கும் ஆற்றல் மிகவுண்டிவர்க்கு. இம்மையில் மனிதனுடைய வாழ்க்கையின் திறம் இவ்வளவுதான் என அறிந்தவர்களாதலின், தொன்று தொட்டுவரும் படிக்க வழக்கங்களையும் அவைகட்குரித்தான நிலைகளையும் இதைத்தழிவு படுத்தவிரும்புதலிலாமலேயேதம் வாழ் நாள் கடத்த

எண்ணுவர். ஆதலாலன்றோ அவர்கள் வெளியுலகத்தின் வன்மையில் ஈடுபடாது நிற்கின்றனர். இது ஒன்றினால் அதாவது வெளியுலகத்தின் சாயல் ஒன்றைத் தெரிந்து கொள்ளாததினால் கிராமத்தான் ஒன்று மறியா பேதையென எண்ணி விடவேண்டாம் அவனோ முடிவரகக்கூறுகில், நன்மை தரும் தொன்மை வாழ்க்கையிலேயே வாழவரும்புவன் பேராசை எதிர்பார்ப்பு ஏமாற்றம் முதலிய சங்கடங்கள் நிறைந்த நிலையை என்றும் விரும்பாதவன். கேவலமானதும் மனதிற்குச் சிறிதும் ஒவ்வாததுமான தீயகாரியங்களை எஞ்ஞான்று மேற்கொள்ளத்துணியாதவன் இத்தகை உயரிய குணங்கள் படைத்தநம் கிரர்மத்தவனோ மக்களிற்தாழ்ந்தவன்?

(தொடர்ச்சி)

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்களின் சங்கம்.

கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்களின் சங்கத்தின் காரிய கமிட்டியின் மீடிங்கு ஒன்று 1928 ௵ டிசம்பர் ௴ 21 தேதியில் மகா-ா-ா-ஸ்ரீ ராய்பகதூர் பழயகோட்டை பட்டக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அதில் அடியில் கண்ட தீர்மானங்களும் நடவடிக்கைகளும் கைக்கொள்ளப்பட்டன.

1. குடியேற வசதியுள்ள இடங்களில் குடியேற விரும்புகிற ஜனங்களுக்கு இலவசமாய் பூமிகள் சாகுபடிக்குக் கொடுக்க கவர்ண்மெண்டாரை கலெக்டர் அவர்களின்மூலியமாய் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பு:—தற்காலம், ஜனப்பெருக்கினால் நிலங்கள் சிறு சிறு பாகங்களாய் பிரிக்கப்பட்டும், பிரயாசைக்கு தக்க வசதிகளற்றும், மழைக்குறைவினாலும், நீர் பாசனதாரகுறைவினாலும் விளைபொருளாதார நிலைமைகள் மிகவும் சீர்கெட்டு வருகிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 2. அந்த ஜில்லாவிலுள்ள கால் நடை ஆஸ்பத்திரிகளுக்கு கட்டாய சிகிச்சைக்காக அனுப்பப்படும் கால் நடைகளுக்கு ஆஸ்பத்திரிகளில் மாட்டுத்தீனி வகைறா குறைந்த விலைக்குக் கிடைக்கவும் இதர சவுகரியங்களையும் செய்து கொடுக்கச் செய்யவும் அதிகாரிகளை கேழ்கவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது. 3. இந்த ஜில்லாவில் அவனாசி தாலூகா மேட்டுப்பாளையம், பொள்ளாச்சு தாலூகா கோட்டூர் கொள்ளேகாலம் இந்த இடங்களில் கால் நடை ஆஸ்பத்திரிகள் அவசியமென்றும் அவைகள் முன்சிபல் அல்லது யூனியன் எல்லைக்கு வெளியில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் கவர்மெண்டாரை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. 4.(a) ஜில்லா ரிவினியூ அதிகாரிகளுக்கு போதுமான சாவகாசம் இல்லாததாலும், P. W. D. அதிகாரிகளுக்கு ஏற்கனவே இருக்கும் வேலைகளுக்கு கிப்பந்திகள் குறைவாய் இருப்பதாலும் மைனர் இரிகேஷன் (சிறிய பாசனதாரங்கள்) வேலைகளை நடத்த கவர்ண்மெண்டில் தனி அதிகாரிகளை நியமிக்கக் கேட்டுக்கொள்ளவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.



(b) இதர ஜில்லா விவசாய சங்கங்களையும், பிரதிநிதிகளையும் அவ்விதமே முயற்சி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. 5. கீழ் பவானி பிருஜக்ட்டு விஷயமாய் கவர்ண்மெண்டிலிருந்து 4-7-28 தேதியில் சங்கத்திற்கு வந்த லெட்டரின்பேரில், இது விஷயமாய் என்ன நடவடிக்கைகள் நடந்திருக்கிறதென்பதை மறுபடியும் கேட்கவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது. 6. ஜெனரல் ஸ்டாம்பு டூட்டி உயர்ந்துவிட்டதால் ஸ்டாம்பு வெண்டர்கள் இப்பொழுது 50 ரூபாய்வரை விற்றுவருவதை 100 ரூபாய் வரை விற்க அனுமதி கொடுக்க கவர்ண்மெண்டாரை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. 7 (a) சங்கத்தின் காரிய கமிட்டி மீட்டிங்குக்கு அடியில் கண்ட கனவான்கள் மெம்பர்களாக சேர்க்கப்பட்டார்கள்: மகா-ா-ா-ஸ்ரீ—கொள்ளேகாலம் மல்லப்பா அவர்கள், உடுமலைப்பேட்டை தாலூகா எரிசினம்பட்டி ஈ. எம். பெரியண கவுண்டர் அவர்கள், ஷை தாலூகா பெரிய வாளவாடி கி நாராயணசாமி நாயுடு அவர்கள், பவானி தாலூகா அந்தியூர் கொள்ளப்பாளையம் ஏ. கே. துரைசாமி ரெட்டியார் அவர்கள், திருப்பூர் புதூர் ஆர். வி. இராமசாமி கவுண்டர் அவர்கள், பொள்ளாச்சி தாலூகா மலையாண்டி பட்டணம் சென்னியப்ப கவுண்டர் அவர்கள் (b) எல்லா தாலூகா போர்டு பிரசிடெண்டு அவர்களையும் இந்த சங்கத்தின் காரிய கமிட்டிக்கு மெம்பர்களாகச் சேரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. 8. கவர்ண்மெண்டார் குண்டு குதிரை சப்ளை செய்ய சம்மதப்படாததால் டிஸ்டிரிக்ட் போர்டாரை கேட்டுக்கொண்டதில் அவர்கள்

சென்ற மீட்டிங்கில் 2 குண்டுக் குதிரைகளையும் 4 பொலி காளைகளையும் சப்ளை செய்ய சம்மதம் கொடுத்ததற்கு அவர்களுக்கு வந்தனம் செலுத்தப்பட்டது.

9. உடுமலைப்பேட்டை தாலுகாவில் தென் பூதிநத்தம் கிராமத்தில் சுமார் 1000 ஏகரா அயன் நஞ்சை பூமிகளுக்கு ஆதாரமான பாலார் ரூஜ வாயக்காலின் ஒரு பாகத்தை சேதம் உண்டாக்கும் ஒரு ஓடையை திருப்பவேண்டியதற்கு வெகு காலமாய் குடித்தனக்காரர்கள் பிரயத்தனங்கள் செய்தும் குடிகள் சங்கத்தின் தூண்டுதலின் பேரில் எஸ்டிமேட் தொகையில் 4 ல் 1 பங்கு தொகையையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டும் பூரா எஸ்டிமேட்டு தொகையும் கொடுத்தால் தான் முடியுமென்று ஜில்லா கலெக்டர் அவர்களும் P.W.D எக்ஸிகூட்டிவ் இஞ்சினீயர் அவர்களும் கேட்பது விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. குறிப்பு:—இதற்கு இனியும் சர்க்காருக்கும் குடித்தனக்காரர்களுக்கும் நஷ்டங்கள் ஏற்படாமலிருக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள கவர்ன்மெண்டாரை கேட்க்க மேல் பிரயத்தனங்கள் நடந்து கொண்டு வருகின்றன. இது உடனே கவனிக்கப்படாவிட்டால் இன்னும் பெரும்பாகமாயுள்ள கீழ் பாசனங்களும் பாதிக்கப்படக்கூடும் என்பது எல்லொருக்கும் தெரிந்த விஷயமே. 10. கோயமுத்தூர் தாலுகா நரசிம்மனாயக்கன் பாளையம் குட்டையைரிப்பேர் செய்ய எஸ்டிமேட்டு தொகை பூராவையும் கண்டிரிபூஷனாக கோயமுத்தூர் தாலுகா போர்டில் கேட்பதைப்பற்றி குடிகள் கண்டிரிபூஷன் சில பாகமாவது கொடுக்கலாமென்று தோன்றுகிறது. இதைப்பற்றி குடிகள் யோசனை செய்த மேல் மறுபடியும் தாலுகா போர்டாரைக் கேட்கவேண்டியிருக்கிறது. 11 சங்கத்தின் முயற்சியால் அவனாசி தாலுகா புதுப்பாளையம் நஞ்சை ஏரியையும் அணைக்கட்டு வாய்க்கால் இதுகளையும் ரிப்பேர் செய்ய எஸ்டிமேட்டு சாங்ஷனாகி வேலைகள் நடத்த ஏற்பாடாகியிருக்கிறதென்பது சந்தோஷப்படக் கூடியதாயிருக்கிறது. 12. கோயமுத்தூர் தாலுகா புலியகுளம் கிராமம் அம்மன் ஏரியின்கீழ் நஞ்சை சாகுபடி இல்லாததால் இதை சர்க்காரில் ரிப்பேர் செய்ய முடியாதென்றும் இதைப்பற்றி வேண்டுமானால் தாலுகா போர்டாரை கேட்க்க வேண்டுமென்றும் கலெக்டர் அவர்கள் சொல்லுவதால் 10-வது பாராவில் சொல்லியிருக்கிறபடி எஸ்டி



மேட்டுத் தொகையில் சில பாகமாவது குடிகள் கண்டிரிபூஷனாக கொடுப்பது தற்கால நிலைமைக்கு பொருத்தமாயிருக்கிறது. இதை கிராமத்தார் யோசனை செய்து எழுதினால் தாலுகா போர்டாரைக் கேட்க்க அனுகூலமாயிருக்கும். 13. அவனாசி தாலுகா குன்னூர் கல்லார் முதலிய பாசனங்களில் ஒரு போக நஞ்சை நிலத்திற்கு ஜூன் மீ 15-தேதிமுதல் டிசம்பர் மீ 15 தேதி வரைக்கும் மாத்திரம் ஜலம் பாய்ச்சிக்கொள்ளலாம் என்கிற பொது விதியை கால நிலைமையை அனுசரித்து கலெக்டர் அவர்களின் யுக்தானுசாரம் செய்யலாமென்று ரெவினியூ போர்டாரவர்களின் உத்திரவுகள் இருந்தும் இவ்வருஷம் பல தடவை முறையிட்டுக்கொண்டதில் அனுகூலமான உத்திரவு கிடைக்காதது மிகவும் விசனிக்கத்தக்கது. குறிப்பு:—பாதிக்கப்படுவதாய் சொல்லும் கொடுவேரி காலிங்கராயன் பாசனங்களின் நிலைமைகளையும் இது சம்மந்தமாக தினப்படி தெரிந்து கொண்டு அதிகாரிகள் முயற்சி செய்தால் மேல்கண்டது கீழ்பத்து முதலிய யாவருக்கும் கெடுதலின்றி செய்யலாம். தவிர இவ்வருஷம் மழை மிகவும் பிந்தி வந்ததால் வெள்ளாமை காலமும் அதை யனுசரித்ததாயிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே தாலுகா அதிகாரிகளாவது ஒரு தண்ணீர் இரண்டு தண்ணீர் விடுவதில் வருஷ வெள்ளாமையின் பலன் காப்பாற்றக் கூடிய அளவாகவாவது தண்ணீர் விடும்படி மேலான அதிகாரிகளிடம் அவசரமான அனுமதி பெற்றுச் செய்யலாமென்பதை இச்சமயம் குடித்தனக்காரர்கள் ஒற்றுமையாய் வற்புறுத்தி சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது.

# வர்த்தமானக்குறிப்பு

பனகல் ராஜா அவர்கள் இறந்து போனதைப்பற்றி நம்முடைய தேசம் ஆராத துக்கத்தை அடைந்திருக்கிறது. அவர் மந்திரியாக விருந்த 6 வருஷகாலத்தில் இராஜாங்க முறைகளில் பல சீர்களை உண்டாக்கினார். காலாகாலமாய் தேவஸ்தானங்களில் சொத்துக்களும் வரும்படிகளும் கேள்வி முறையில்லாமல் தர்ம கர்த்தர்களால் துர்வினியோகம் செய்யப்பட்டு வந்தன. அவ்விஷயத்தில் அவர் புத்தியைச் செலுத்தி அவ்வித அக்கிரமங்கள் இனி நடக்காதபடியாக ஒரு சட்டத்தை உண்டாக்கினார். இராஜாங்க இலாகாக்க

ளில் இதுவரையில் பெரிய உத்தியோகங்கள் வெள்ளையர்களாலேயே வஹிக்கப்பட்டு வந்தன. அவைகளுள் அநேக உத்தியோகங்களை இந்தியர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று கவர்மெண்டாரை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். நம்முடைய தேசவைத்திய முறைகளை முன்னுக்குக்கொண்டு வரவேண்டுமென்கிற நோக்கம் கொண்டு சென்னையில் கவர்மெண்டு இந்திய வைத்தியக்கல்விச்சாலை யொன்றை ஸ்தாபித்தார். விசாகப்பட்டணத்தில் கவர்மெண்டு மெடிகல் காலேஜ் ஒன்றை ஸ்தாபித்தார், கிராமாந்தரங்களிற்கு வைத்திய வஸதிகளை யுண்டாக்கினர். இவரைப் போன்ற சிறந்த ராஜியவாதியும் ஜனத் தலைவரும் இதுவரையில் நம்முடைய மாஹாணத்தில் ஏற்பட்டதில்லை.

x x x x x

சென்னை மாட்டுவைத்திய இலாகாவில் டிப்டி ஸூபெரிண்டாக விருககும் ஸ்ரீமான் கைலாஸம் ஐயர் அவர்களை கவர்மெண்டார் இங்கிலாந்துக்கு உயர்வுப்படிப்பின் நிமித்தம் அநுப்பியிருக்கிறார்கள். அவர் மாட்டு வைத்திய இலாக்காவில் சிறந்த ஊழியர். இங்கிலாந்தில் அவர் அடையப்போகிற கல்வி மாட்டுவைத்திய இலாகாவிற்கு நிரம்ப உபயோகமாகும்.

x x x x x

வெடிரினரி அட்வைஸரோடு சென்னை கவர்மெண்டார் பல தடவைகளாகக்கூடி ஆலோசனைகளைச் செய்கிறார்கள். மாட்டு வைத்திய ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்ஸரிகளும் போதுமான அளவில் நம்முடைய மாஹாணத்தில் ஏற்படவேண்டும். இவைகள் தற்சமயம் குறைவாய் இருந்து கொண்டிருக்கின்றன. மாட்டுவைத்திய வஸதிகள் தக்கபடி யில்லாமலிருப்பதால்தான் பதினாயிரக்கணக்கான மாடுகள் மாண்டுபோகின்றன. மாடுகளின் ஜனனமரணக்கணக்குகள் கிராமமணியக்காரர்களால் சரிவரத்தயாரிக்கப்படுகிறதில்லை. அவைகளைப்பற்றி ரெவனியூ உத்தியோகஸ்தர்களும் வியவஸாய இலாக உத்தியோகஸதர்களும் கவலையையே யெடுத்துக்கொள்கிறகில்லை. அவ்விவரக்கணக்குகள் சரிவரத்தயாரிக்கப்பட்டு கவனிக்கப்பட்டால் நோய்கள் இன்ன இன்னவை யென்று கண்டுபிடிக்கப்பட்டு தக்க முயர்ச்சிகள் எடுத்துக்கொள்ளப்படக்கூடும்.

x x x x x x



நம்முடைய மாஹாணத்திலுள்ள ஹாஸ்பிடல்களுக்கும், டிஸ்பென்சரிகளுக்கும் ஜனசங்கியையில் 100 இல் 5 பெயர்கள்தான். வைத்தியத்திற்காகச் செல்கிறார்கள். பாக்கி 95 பெயர்கள் நாட்டுவைத்தியத்தையே நாடுகிறார்கள். மேநாட்டு வைத்திய ஏற்பாடு அதிகபணச் சிலவையுள்ளது. கவர்மெண்டார் ஆகையால் நாட்டுவைத்தியர்களையும், நாட்டுவைத்திய வைத்திய சாலைகளையும் கிராமாந்தரங்களில் ஏற்படுத்த வேண்டும்.

x x x x x x

ஜப்பானில் குடியை நிருத்த வேண்டிய நிமித்தமாய் தளராமல் முயர்ச்சிகள் நடைபெருகின்றன. சில நாள் முன்பு 150 ஸங்கங்களின் பிரதிநிதிகளையடங்கிய 6000 பெயர்கள் கொண்ட ஊர் வலம் ஒன்று டோக்கியோவில் நடத்தப்பட்டதாம். இன்னும் இப்படிப்பட்ட ஊர் வலங்கள் பெரிய பட்டணங்களில் நடத்தப்படுமாம். ஜனங்கள் இவைகளை ஆதரிக்கிறார்களாம்.

x x x x x x

நம்முடைய மாஹாணத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் மலேரியாஜூரமும் இதர வியாதிகளும் குடிகொண்டிருக்கின்றன. மரணங்களின் ஸங்கியை மேல் மேலும் உயர்ந்து கொண்டிருக்கிறது. வியவஸாயிகளின் வலிமை குரைந்து கொண்டுவருகிறது. வைத்திய வஸதிகளுண்டாக்கப் பட்டால் மாத்திரம் போதாது. ஜனங்கள் ஆரோக்கிய வழிகளில் போதிக்கப்படவேண்டும். ஆரோக்கிய இலாகாவின் தலைவரின் பிரகடனத்தில் போதனை நிமித்தமாக லினிமாக்களும், உபந்நியாஸங்களும், | கண்காக்ஷிகளும் நடத்தப்படுகின்றன வென்று கூறப்பட்டிருக்கிறதைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். தென் இந்தியா தேசீய ஆரோக்கிய ஸங்கமென்று ஒரு ஸங்கம் ஆரோக்கிய விஷயங்களில் எல்லா கிராமங்களிலும் பிரச்சாரங்களைச் செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறது.

x x x x x x

சில உஷ்ணதேசவிளைப்பொருள்களை இந்தியாவே மேநாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. கொஞ்சகாலமாய் அவைகள் ஆப்ரிகாவிலும் தென் அமெரிகாவிலும், ஆசியாவின் தெனபக்கத் தீவுகளிலும் விளைக்கப்பட்டு சில ஐரோப்பிய நாடுகளால் அடையப்

படுகின்றன. இந்தியாவின் வியாபாரம் குறையாமலிருக்க வேண்டுமானால் ஐரோப்பியதேசங்களிற்கு வேண்டியபொருள்களின் விவரங்களும் அவைகளின் அளவு விவரங்களும் கவனிக்கப் பட்டு வரவேண்டும். மேலும், ரெயில்வே, கப்பல் சௌகரியங்களும் நிரம்ப ஏற்படவேண்டும்.

x x x x x x

செங்கற்பட்டு ஜில்லாவில் சைதாப்பேட்டைதாலுக்காவில் கட்டாயக்கல்விமுறை முதல் முதலாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சைதாபேட்டை தாலூகாவில் 20000 பிள்ளைகளிருக்கிறார்கள். இதைத் தவிர பெண்களும் கிட்டத்தட்ட அத்தனை பெயர்களிருக்கிறார்கள். கவர்மெண்டார் கட்டாயக் கல்விமுறையை மூன்று வருஷகாலம் சைதாப்பேட்டை தாலூகாவில் அநுஷ்டித்துப்பார்த்து அதன் பின்பு மற்றப்பிரதேசங்களில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். 6 டிப்டி இன்ஸ்பெக்டர்களை கிராமங்களையெல்லாம் சுற்றிப்பார்த்து பள்ளிக்கூடங்களை வைப்பதற்கு யோஜனைச்சொல்லும்படி நியமித்திருக்கிறார்கள்.

இந்த 1928-29 வருஷத்திய மீதிமாதங்களில் செலவுக்காகவே 4½லக்ஷரூபாய் வேண்டியிருக்குமாம். கவர்மெண்டாரே இந்தத் தொகையில் பெரும்பாகத்தைக் கொடுக்கப்போகிறார்கள். இந்த ஏற்பாடும் செங்கல்பட்டு ஜில்லா போர்டின் பிரஸிடெண்டாகவிருக்கும் ராவ் பஹதூர் எம். கே. ரெட்டி அவர்களின் முயர்ச்சிகளால் தான் உண்டாயிருக்கிறது. நமது சஞ்சிகைகளில் இவருடைய புகழத்தக்க தேசஊழியங்கள் கூறப்பட்டு வருகின்றன. இவரைப்போலவே இதர ஜில்லா போர்ட்டுகளின் பிரஸிடெண்டுகளும் தேசநன்மையின் பொருட்டு உழைப்பார்களாகில் நம்முடைய மஹாணத்திய கிராம ஜனங்கள் வெகு சீக்கிரத்தில் முன்னேற்றத்தையடைவார்கள்.

x x x x x

மைசூர் ஸமஸ்தானத்தில் ஸர்க்கார் காடுகளில் வெள்ளாடுகள் மேய்வது தடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே நம்முடைய மாஹாணத்திலும் உத்திரவுகள் ஏற்படவேண்டுமென்று கோருவோம். பஞ்சாயத்துக் காடுகள் வெள்ளாடுகளால் அழிக்கப்படுகின்றன



வென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஸர்க்கார்க்காடுகளிலும் பஞ்சாயத்துக் காடுகளிலும் இவைகள் புகாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

x x x x x

இந்தியா கவர்மெண்டார் ரோமில் நடைபெறப் போகிற வியவஸாய ஸ்தாபன மஹாநாட்டிற்கு மிஸ்டர் குரு ஸதயதத்து ஐ. ஸீ. எஸ் அவர்களை இந்திய பிரதிநிதிகளுக்குத் தலைவராகச் செல்லும்படி நியமித்திருக்கிறார்கள். மிஸ்டர் தத்து அவர்கள் வங்காளத்தில் ஜில்லா கலெக்டராகவிருந்து வியவஸாய அபிவிருத்தியில் மிகுந்த ஊக்கத்தை வஹித்தவர்.

x x x x x

ஜாம்நகர் ஸமஸ்தானத்திய அரசர் தனுடைய ஸமஸ்தானத்தில் சங்களில் தஸ்ரா காலங்களில் எவரும் மிருகபலிகளை நடத்தக்கூடாதென்று உத்திரவிட்டிருக்கிறார்.

## செடிவர்க்கங்களின் விஷயங்கள்

### அத்தியாயம் I செடிவர்க்கங்கள் உயிருள்ளவைகள்

விருக்ஷங்கள், செடிகள், புல் பூண்டுகள் இவைகளெல்லாம் உயிருள்ள வஸ்துக்கள். மனிதர்களும் மிருகங்களும் உயிரை வஹிப்பது போலவே அவைகளும் உயிரை வஹிக்கின்றன. அவைகளும் தாய் தந்தையர்கள் இருவர்களால் உண்டாக்கப்பட்ட விதையிலிருந்து ஜனித்தவைகளே. அவைகளும் ஆஹாரத்தைப் புசித்து ஜீவிக்கின்றன. அவைகளுக்கும் ஆஹாரத்தை உட்கொண்டு ஜீர்ணித்துக் கொள்வதற்காக வாய்களும், ஜீர்ணப்பைகளும் இருக்கின்றன. இலைகள்தான் அவைகளின் வாய்கள். அவ்விலைகள் சுற்றியுள்ள வாயுவிலிருந்து கார்பனிக் ஆஸிட்என்கிற ஆவியைப்பிடித்துக் கொள்கின்றன. அப்படி பிடித்துக் கொண்டபின்பு அதிலிருந்து கார்பனைப் பிரித்து உரிஞ்சி விடுகின்றன. செடிவர்க்கத்தின் சரீரத்துக்கும் உயிருக்கும் கார்பனானது மிகவும் அவசியமானது. செடிவர்க்கங்கள் ஜலத்தையும் மனிதர்கள், மிருகங்கள் இவைகளைப்போலவே குடிக்கின்றன. ஆனால் குடிப்பதற்கு அவைகள்வேறு அவயவத்தை உபயோகிக்கின்றன—அதாவது பூமியிலுள்ள அவைகளின் வேரையும் வேர்க்கிளைகளையும் உபயோகிக்கின்றன.

செடிவர்க்கங்கள் கல்யாணம் செய்துகொள்கின்றன, குடும்பங்களையும் விருத்தி செய்கின்றன. செடிகளுள் ஆண், பெண் பாகங்களுண்டு. சிலசெடிகள் ஆண் செடிகளாகவும், சிலசெடிகள் பெண் செடிகளாகவும் இருப்பதும் உண்டு. தவிர, அநேகமான செடிகளில் ஒரே தண்டிலேயே இருவகை ஜாதி அங்கங்களு மிருக்கின்றன. ஒரே செடியின் புஷ்பத்திலேயே அவ்விரு அங்கங்களும் அமைந்திருப்பதும் உண்டு. செடிகளில் புஷ்பங்கள்தான் கர்ப்பத்திற்கு வேண்டிய அவயவங்களை யுடைத்தானவை. அவைகள் விதையை உண்டாக்கி வம்ச விருத்தியைச் செய்வதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. உயர்வு வகைச்செடிகளில் புஷ்பங்களில் ஸ்டேமன்சு என்கிற அங்கங்கள்தான் ஆண் அவயவங்கள். அவைகள் தலையில் போலன் என்கிற மஞ்சள் நிறமான தூளை வஹிக்கின்றன. மேல்குறித்த உயர்வான வகைச்செடிவர்க்கங்களின் புஷ்பங்கள், நடுவில் பிஸ்டில் என்கிற கம்பிபோன்ற பாகத்தையுடைத்தா யிருக்கின்றன. பிஸ்டில்தான் பெண்பாகம் அது அடியில் கர்ப்பபையை யுடைத்தாயிருக்கிறது. அதில் ஓவ்யூல் என்கிற சிறிய முட்டைகள் இருக்கின்றன. மேல்சொல்லிய போலன்கள் இவைகளோடு சேர்ந்து இவைகளை விதைகளாகச் செய்கின்றன. போலன்கள் பிஸ்டிலிலுள்ள கர்ப்பப்பையை அடைந்த பின்பு கர்பப்பை முத்த ஆரம்பிக்கிறது. முட்டைகளும் விதைகளாகின்றன. கர்ப்பப்பை காயாகிறது, பின்பு பழமாகிறது.

மனிதர்கள், மிருகங்கள், இவைகளைப்போலல்லாமல், செடிவர்க்கங்கள் சலனமில்லாமல் தரையிலேயே பதிந்திருக்கின்றன. இக்காரணத்தினால் அவைகள் தங்களுக்கு சம்போகத்திற்காக ஆண்களையும் பெண்களையும் தேடிக்கொண்டு போகக்கூடுகிறதில்லை. ஆண் பெண்களின் சம்பந்தமானது வேறு விதமாகச் செய்யப்படுகிறது. புல்களில் ஒரு புஷ்பத்திலிருந்து இன்னொரு புஷபத்திற்கு காற்று போலனைக் கொண்டு போய்ச்சேர்க்கிறது. புல்புஷ்பங்களின் ஸ்டேமன்கள் காற்றிலாடிக்கொண்டு தொங்குகின்றன. அவைகளின் பிஸ்டில்கள் அப்படி காற்றிலாடிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கும் ஸ்டேமன்களின் போலன்களை கிரஹித்துக்கொள்வதற்காக சிறகுகளையுடைய இறக்கை போன்ற அநேகவால்களை வஹித்துக் கொண்டு காத்துக்கொண்டிருக்கின்றன. இன்னொரு விதமாகவும் புணர்ச்சியானது நடத்தப்



படுகிறது: நம்முடைய தோட்டங்களின் செடிகளுள் புணர்ச்சியானது ஈக்களாலும், வண்டுகளாலும், பூச்சிகளாலும் நடத்தப்படுகிறது. செடிகள் தங்களுடைய மலர்களை நேர்த்தியாகவும், நல்லவர்ணங்களுடனும் வைத்துக்கொண்டு இவைகளை மோஹிக்கின்றன. தவிரவும், மலர்களிலுள்ள தேனின் நிமித்தமாகவும் அவைகள் புஷ்பங்களில் நுழைகின்றன. அப்படி நுழைந்து வருகையில் ஒரு பூவின் போலனை மேல் பூசிக்கொண்டும் மற்றொருமலரின் பிஸ்டிலின் கர்ப்பப்பையில் அவைகளை தடவி விட்டும் வெளிக்கிளம்புகின்றன. பிஸ்டிலின் அடியில் இருக்கிற கர்ப்பப்பையில் தான் செடி தேனை வஹிக்கிறது. பூச்சிகள் தேனைக்கிரஹித்துக்கொண்டு வெளிக்கிளம்புகின்றன. இவ்விதங்களாக போலன்கள் கர்ப்பப்பைகளில் அமைக்கப்பட்டபின்பு கர்ப்பப்பைகளிலுள்ள முட்டைகள் விதைகளாகின்றன. விதைகள் சரியான செடிகளாகவும் விருக்ஷங்களாகவும் ஓங்கிவளர வேண்டிய நிமித்தம் தாய்ச்செடிகளும் விருக்ஷங்களும் இரண்டுவித உபாயங்களை யநுஷ்டிக்கின்றன. அவைகள் விதைகளுக்கும் பழங்களுக்கும் மயிர்களடர்ந்த தோல்களையும் அமைக்கின்றன. இவைகளை காற்று அடித்துக்கொண்டுபோய் சரியானப்பிரதேசங்களில் நடுகின்றது. விதைகள் முளைத்து நன்றாய் ஓங்கிவளருகின்றன. தாய் விருக்ஷங்களும் செடிகளும் இனிப்பான பழங்களை வஹித்து பக்ஷிகளையும் மிருகங்களையும் அவைகளைப்புசிக்கும்படி அழைக்கின்றன. பக்ஷிகளும் மிருகங்களும் அப்பழங்களைத்தின்றுவிடுகின்றன. விரைகள் கெட்டியானவைகளானதினால், அவைகள் கெட்டியான ஓடுகளையும், தோல்களையும் உடைத்தாயிருக்கின்றன. ஆகையால் பக்ஷிகளும் மிருகங்களும் அவைகளை விழுங்கிவிடுகின்றன அவ்விரைகள் மலங்களோடு சேர்ந்து ஆங்காங்கு பூமியில் போடப்பட்டு முளைத்து வளர்கின்றன.

செடிவர்க்கங்களில் உயர்வான வகுப்புகளைத்தான் மேற்கூறிய விஷயங்கள் ஒத்தவை. மிருகங்களைப்போல செடிவர்க்கங்களிலும் அநேக அந்தஸ்துகள் உண்டு. உயர்வான வகைகளென்றும், தாழ்வான வகைகளென்றும் உண்டு. அவைகளை வகுப்பு பேதங்களின் சம்பந்தமாகக் கவனித்துப் பார்ப்போம். அதாவது ஏன் சில செடிவர்க்கங்கள் குட்டையாயிருக்கின்றன? ஏன் சில வகைகள் பெரிதாகவிருக்கின்றன வென்பதையும், ஏன் சில வகைகளின் வாழ்நாள்கள் ஒரு வருஷமாகவும், சிலவகைகளின் வாழ்நாள்கள் ஆறு மாதங்களாகவும், இன்னும் சில வகைகளின் வாழ்நாள்கள் இன்னும் குறைவாகவும் ஏற்பட்டிருக்கின்றன வென்பதையும், ஏன் சில வகைகள் நிலத்திலேயே பயிராகின்றன, ஏன் சிலவகைகள் நீரிலேயேபயிராகின்றன வென்பதையும், ஏன் அவைகளின் தண்டுகள் ஒன்றைப்போலில்

லாமல் வெவ்வேறு விதமாக அமைந்திருக்கின்றன வென்பதையும் அறியமுயலுவோம்.

## அத்தியாயம் II.

## செடிவர்க்கங்கள் எப்படி உண்டாயின?

உலகத்தில் எது முதலில் ஏற்பட்டது; செடிவர்க்கமா, மிருக வர்க்கமா? செடி வர்க்கங்களிற்கும் மிருக வர்க்கங்களிற்கும் இருக்கப்பட்ட சம்பந்தமானது மிருகங்களைக் கொன்று புஜிக்கிற சிங்கம், புலிபோன்ற காட்டு மிருக களிற்கும் அவைகளால் கொல்லப்பட்டுப் புசிக்கப்பட்ட இதர மிருகங்களிற்கும் உள்ள சம்பந்தத்தைப் போன்றது. சிங்கங்களும் புலிகளும் ஆதியிலேயே ஏற்பட்டிருக்கக் கூடியவைகளல்ல. ஏனென்றால், அவைகள் ஆஹாரமாய்க் கொண்டிருக்கிற மான், பசு முதலிய மிருகங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருந்திருக்கவேண்டும். மான், பசு முதலிய ஜந்துக்கள் புல்லையும் தழையையும் ஆஹாரமாகக் கொண்டிருக்கிற படியால் புல்லும் தழையும் மான், பசு முதலியவை ஏற்படும்முன்னமே ஏற்பட்டிருக்க வேண்டும். செடிவர்க்கம் தனக்குவேண்டிய ஆஹாரத்திற்கு மிருகங்களை உபயோகிக்கிறதில்லை. செடிவர்க்கம் போஷண ஆதாரங்களை உண்டாக்குகிறது. மிருகவர்க்கம் அவைகளை கிரஹித்து உபயோகித்து வருகிறது.

மரத்துண்டில் ஹைட்ரொஜனும் கார்பனும் இருக்கின்றன. ஆக்ஸிஜன் அதில் இல்லை மரத்துண்டுக்குத் தீவைத்தால் அது சாம்பலாகிற வரையில் எறிகிறது. மரத்துண்டு எறியும்பொழுது என்ன சம்பவிக்கிறது? மரத்துண்டிலிருக்கும் கார்பனும், ஹைட்ரொஜனும் ஆக்ஸிஜனோடு சேர ஓடுகின்றன. கார்பன் ஆக்ஸிஜனோடு சேர்வதால் கார்பானிக ஆசிடும், ஹைட்ரோஜன் ஆக்ஸிஜனோடு சேர்வதால் நீரும் உண்டாகின்றன. கார்பனிக் ஆஸிடும், ஆவிரூபமாக இருக்கிற நீரும் வாயுமண்டலத்தில் சேர்கின்றன. மரம் எறிகிறது என்றால் மரத்தின் ஹைட்ரொஜனும் கார்பனும் தனித்தனியாக ஆக்ஸிஜனொடு ஸம்பந்தப்படுகின்றன வென்பதுதான். கார்பனும் ஹைட்ரொஜனும் எறியும் பொழுது அவைகள் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் வெளியில் விடுகின்றன. எறிவதற்கு முன்னே இவ்வெளிச்சமும் உஷ்ணமும் தனித்தனியாக அவைகளில் நிறைந்து மறைந்திருந்தன. ஆகவே வெளிச்சமும் உஷ்ணமும் கார்பனிலும் ஹைட்ரொ ஜனிலும் எப்பொழுதும் மறைந்திருக்கின்றன. ஆக்ஸிஜனோடு சேரும் காலத்தில் தான் அவைகளை அவைகள் வெளியில் விடுகின்றன. வெளிச்சமும், உஷ்ணமும் கார்பனுக்கும் ஹைட்ரொ ஜனிற்கும் எப்படி ஏற்பட்டன? எறிகிற மரத்துண்டானது திறந்த வெளிகளில் வெய்யலில் வளரும்விருக்ஷத்தின்பாகம். ஆகையால்சூரியனிடத்திலிருந்துதான் வெளிச்சமும் உஷ்ணமும் அவைகளுக்கு ஏற்படுகின்றன. வெய்யலானது விருக்ஷங்களின் இலைகளின்மேல்பதிந்து கார்பானிக் ஆஸிடிலிருக்கும்கார்ப்பனை



ஆக்ஸிஜனிலிருந்து பிரித்து விடுகிறது அப்படிப்போலவே அது துண்டியிலுள்ள நீரிலிருந்து ஹைட்ரொஜனை ஆக்ஸிஜனிலிருந்து பிறித்து விடுகிறது. இப்படிபிரிக்கப்படும் ஆக்ஸிஜனானது வாயு மண்டலத்தை அடைகிறது. விருக்ஷத்தின் பாகமாகவளர்ந்த மரத்துண்டானது எவ்வளவு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் சூரியனிடத்திலிருந்து கிரஹித்ததோ அவ்வளவு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் அது எறியும்பொழுது வெளிவிடுகிறது. மேலும், அவ்வளவு வெளிச்சமும் உஷ்ணமும் அது எறிந்து போகிற வரையில் வளர்ந்து வருவதற்கு வேண்டியதாகவிருந்தது.

ஒரு மரத்துண்டை எறித்தோமானால். மரத்துண்டிலிருக்கும் கார்பனோடு சேர்வதற்காக ஆக்ஸிஜனுடைய துளிகள் ஓடிவருகின்றன. அவைகளிரண்டும் சேர்ந்து கார்பானிக் ஆஸிடையுண்டாக்குகின்றன. எவ்வளவு கார்பானிக் ஆசிடை அவைகள் உண்டாக்குகின்றன? அந்தமரத்துண்டு செடியில் வளரவேண்டியதற்காகஎவ்வளவு கார்பனிக்ஆஸிட் வேண்டியதாகவிருந்ததோ அதேஅளவு கார்பனிக் ஆசிட் உண்டாக்கப் படுகிறது. கார்பனிக் ஆஸிட் உண்டாக்க படுகிறது போலவே மரத்துண்டு எறியும் பொழுது மரத்துண்டிலிருக்கும் ஹைட்ரொஜன் வாயு மண்டலத்திலிருக்கும் ஆக்ஸிஜனோடு சேருகிறது. அந்தப்புணர்ச்சியால் நீராவி ரூபமானஜலம் உண்டாகிறது. அந்த மரத்துண்டு வளர்ந்து வரவேண்டிய நிமித்தம் செடி எவ்வளவு நீரை உட்கொண்டதோ அவ்வளவு நீராவிரூபமான ஜலம் உண்டாகிறது. மரத்துண்டின் கார்பனும் ஹைட்ரோஜனும் இவ்விதமாக ஆக்ஸிஜனோடு சேரும் பொழுது அவைகள் மறைத்து வைத்துக்கொண்டிருந்த வெளிச்சமும் உஷ்ணமும் வெளி வருகின்றன. அவ்வெளிச்சத்தினுடையவும், உஷ்ணத்தினுடையவும் அளவு அந்த மரத்துண்டு வளர்ந்து வருததற்காக செடி எவ்வளவு வெய்யலை கிரஹித்ததோ அந்த அளவுதான். அதாவது எறிந்ததுண்டு செடியில் வளருவதற்காக கார்பனைக் கார்பானிக் ஆசிடிலிருந்தும் நீரிலிருந்து ஹைட்ரோஜனையும் கிரஹித்து எவ்வளவு ஆக்சிஜனை தனிப்படுத்தியதோ அவ்வளவு ஆக்சிஜன் மரத்துண்டு எறியும்பொழுது இதிலுள்ள கார்ப்பனோடும் ஹைட்ரோஜனோடும் சேர்கின்றது. அதுபோலவே, மரத்துண்டு வளரவேண்டியதற்காக கார்பன் கார்பனிக் ஆசிடிலிருந்தும், ஹைட்ரொஜன் நீரிலிருந்தும் பிறிக்கப்பட வேண்டிய நிமித்தம் எவ்வளவு வெளிச்சமும் உஷ்ணமும் வேண்டியதாகவிருந்ததோ அதேஅளவில் வெளிச்சமும், உஷ்ணமும் அவைகளைக்கூட்டி வைப்பதற்கு வேண்டியதாக விருக்கின்றன.

மிருகவர்க்கமானது செடி வர்க்கம் உண்டாக்கி வைப்பதைத் தின்று அழித்து விடுகிறது. மிருகங்கள் சுவாஸ மூலமாக ஆக்சிஜனை உட்கொள்ளுகின்றன. உட்கொள்ளப்பட்ட ஆக்சிஜனானது சரீரத்தின் கார்பனோடும் ஹைட்ரோஜனோடும் சேர்ந்து கார்பனிக் ஆசிடாகவும், நீராவியாகவும் வெளியில் வருகிறது. இவ்விதமாக

ஆக்சிஜனை து கார்பனோடும் ஹைட்ரோஜனோடும் சேரும் பொழுது அவைகளில் மறைந்திருந்த உஷ்ணமும் வெளிச்சமும் சரீரச்சூடாகவும் சரீர சலன மாகவும் ஏற்படுகிறது:

ஆகவே, செடிவர்க்கம் கார்பனிக் ஆசிடிலிருந்தும் ஜலத்திலிருந்தும் ஆக்ஸிஜனை பிரித்து விட்டு கார்பனையும் ஹைட்ரோஜனையும் தன்னுடைய சரீரத்தில் சேர்த்துக்கொள்ளுகிறது. மிருகவர்க்கம் ஆக்சிஜனை சுவாஸத்தினால் உட்கொண்டு தன்னுடையசரீரத்திலிருக்கும் கார்பனோடும் ஹைட்ரோஜனோடும் சேர்த்து கார்பானிக் ஆசிடையும், ஜலத்தையும் உண்டாக்கி வெளியில் விடுகிறது. மேலும், மிருகவர்க்கமானது , செ டி வ ர் க் க ம் சூரியனிடத்திலிருந்து அடைந்து தன்னுடைய சரீரத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிற உஷ்ணம், வெளிச்சம் இவைகளை உடம்புச்சூடாகவும் சலனமாகவும் மாற்றிக்கொள்கிறது.

செடிவர்க்கம் முதல் முதலில் இருந்திருக்கவேண்டும், மிருகவர்க்கம் பின்புதான் ஏற்பட்டிருக்கவேண்டும். செடிவர்க்கங்களிற்கு கார்பனையும், ஹைட்ரோஜனையும் கார்பானிக் ஆசிடிலிருந்தும் ஜலத்திலிருந்தும் அடைந்து கொள்கிற சுவபாமாகையால் அவைகள் மேல் மேலும் இத்தொழிலை நடத்தி அளவுகளில் தாங்க முடியாத அவைகளை அடைகின்றன. இப்படிப்பட்ட அளவுகளை சிலதாழ்ந்த செடிவர்க்கங்கள் அடையும்பொழுது ஒவ்வொரு செடியும் இரண்டாகப்பிரிந்து விடுகின்றன. பிரிந்தபாகங்கள் இரண்டும் ஒரேவித லக்ஷணங்களுடனே ஏற்படுகின்றன. இவ்விதத்தாழ்ந்த வகைச்செடிகளுள் ஆண் பெண் அம்சங்களை கிடையாது. உயர்வுவகைச்செடிவர்க்கங்களுள் ஆண் பெண் பேதங்களிருக்கின்றன. ஆண் செடியின் போலன் பெண் செடியின் கர்ப்பப்பையிலுள்ள முட்டைகளோடு சேர்ந்து குழந்தைகளை வஹிக்கிற விரைகளை ஜனிக்கின்றன. இவ்விதைகள் தாய் தகப்பன்களுடைய அடையாளங்களை உட்கொள்ளுகின்றன.

## பிழைதிருத்தம்

நமது பிப்ரவரிமாத சஞ்சிகையில் 46—வது பக்கததில் "உதவி அக்ராஸனர்கள்" என்கிற தலப்பின் கீழ் அடியில் கண்ட வரியை சேர்த்துக் கொள்ளவும்:—

1. "திவான் பஹதூர் கேசவப்பிள்ளை ஸீ. ஐ. ஈ. அவர்கள்" இந்த வரியான்து தவருதலால் விட்டுப்போனதைப்பற்றி விசனிக்கிறோம்.

## மதருஸ் பாரேஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

கீழ்க்கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நடந்த பிப்ரவரி மீ முடிவுரை அப்படி பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின் ஸங்கியை 355: பங்கின் பொருப்பு ஒரே ரூபாய்தான். கொடுக்கப்பட்ட மொத்த பங்குகள் 605.

இந்த பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட பங்குதாரர்களுடைய பெயர், விலாசம், முதலிய விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

| நெ. | பெயர் | பஞ்சாயத்து | ஜில்லா | ஷேர் |
|---|---|---|---|---|
| | | | முன்ஸஞ்சிகைபடி மொத்தம் | 253. |
| 181 | சடையகோனர் | தேவிபந்தல் | தெ ஆற்காடு | 1 |
| 182 | நாராயணசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 183 | முத்துநல்லப்பநாயகர் | குரும்பலூர் | திருச்சி | 1 |
| 184 | ஆறுமுகபடையாச்சி | ,, | ,, | 1 |
| 185 | மன்னதி கோனர் | ,, | ,, | 1 |
| 186 | பச்சை முத்து கோனர் | ,, | ,, | 1 |
| 187 | முத்துசாமி ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 188 | பரதேசிமொட்டையன் | ,, | ,, | 1 |
| 189 | எ. வைத்திலிங்க நாயகர் | பாச்சல் | வ. ஆற்காடு | 1 |
| 190 | ஆர். வைத்திலிங்க உடையார் | ,, | ,, | 1 |
| 191 | முத்துசாமி நாயகர் | ,, | ,, | 1 |
| 192 | அப்பாயி நாயுடு | ,, | ,, | 1 |
| 193 | முருகேச பிள்ளை | படவேடு | வ ஆற்காடு | 7 |
| 194 | மாவாண்டி ரெட்டி | மாமண்டூர் | செங்கற்பட்டு | 1 |
| 195 | டி. நாரயணசாமி நாயுடு | ,, | ,, | 1 |
| 196 | கே. முருக ரெட்டி | ,, | ,, | 1 |
| 197 | வெங்கிடராஜ நாயுடு | ,, | ,, | 1 |
| 198 | குள்ளப்பரெட்டி என்கிற பெருமாள் ரெட்டி | ,, | ,, | 1 |
| 199 | [illegible] | | | |

| நெ. | பெயர் | பஞ்சாயத்து | ஜில்லா | ஷேர் |
|---|---|---|---|---|
| 200 | ஷெயிக் அப்துல்லாசாயபு | ,, | ,, | 1 |
| 201 | பெத்தா சித்தம நாயடு | பந்தர்லபள்ளி | சித்தூர் | 5 |
| 202 | மாணிக்க சேர்வை | கீழக்குரிச்சி | தெ ஆற்காடு | 5 |
| 203 | ஈ. அனந்தாசாரியர் | வெண்குளம் | வ ஆற்காடு | 1 |
| 204 | கே. கன்னியப்பன் | ,, | ,, | 1 |
| 205 | வி. என். சிங்கார முதலியார் | ,, | ,, | 1 |
| 206 | அப்பாவு நாயினர் | ,, | ,, | 1 |
| 207 | காபர்கான் சாயபு | ,, | ,, | 1 |
| 208 | பரசுராம செட்டியார் | வெடவளம் | வ ஆற்காடு | 1 |
| 209 | ராமசாமி கவுண்டர் | ,, | ,, | 1 |
| 210 | பச்சை கோனன் | ,, | ,, | 1 |
| 211 | வி. நாராயண அய்யர் | துனைவ புஷ்பகிரி | வ ஆற்காடு | 7 |
| 212 | பொன்னுசாமி நாயுடு | ராவத்த நல்லூர் | தெ ஆற்காடு | 2 |
| 213 | குப்பு ரெட்டியார் | பள்ளிகுப்பம் | செங்கற்பட்டு | 1 |
| 214 | சின்னசாமி ரெட்டியார் | ,, | ,, | 5 |
| 215 | முனிசாமி கவுண்டர் | நெடுங்குனம் | வ ஆற்காடு | 1 |
| 216 | வி. அப்பாவு கவுண்டர் | ,, | ,, | 1 |
| 217 | முருவ கவுண்டர் | ,, | ,, | 1 |
| 218 | என். தங்கவேலு முதலியார் | ,, | ,, | 1 |
| 219 | ரங்கசாமி கவுண்டர் | ,, | ,, | 1 |
| 220 | அர்ஜுனன் ஆதி திராவிடன் | ,, | ,, | 1 |
| 221 | சிந்தவரகுனத ரெட்டி | வாயல்பாடு | சித்தூர் | 1 |
| 222 | நாரம் செட்டி ஹனுமந்தய்யா | ,, | ,, | 1 |
| 223 | குண்டுபள்ளி ரங்கய்ய | ,, | ,, | 1 |
| 224 | தும்மல ராம ரெட்டி | மற்றிபாடு | ,, | 1 |
| 225 | வெல்லவலூரிநாகப்ப செட்டி | ,, | ,, | 1 |
| 226 | சின்னசாமி உடையார் | சேதுவராயன் குப்பம் | தெ ஆற்காடு | 2 |
| 227 | நல்லதம்பி உடையார் | உடையமாம் பட்டு | தெ ஆற்காடு | 5 |
| 228 | பூவத்த உடையார் | பொன்னியந்தல் | தெ ஆற்காடு | 3 |
| 229 | வரத கவுண்டர் | மோட்டுபாளையம் | வ ஆற்காடு | 1 |
| 230 | நாதமுனி நாயுடு | மணலி | செங்கற்பட்டு | 5 |
| | | | | ஆ 339 |


இனும்! ரப்பர் முத்திரை இனும்!

நமது சக்கரவர்த்தி அவர்களால் நன்கு மதிக்கப் பெற்ற 14 காரட் கோல்ட் நிப்பு பதித்த பவுண்டன் பேனா வெகு நாளைக்கு உழைக்கும், எல்லா காகிதத்திலும் நன்றாக எழுதும்.




இந்தபேனா வாங்கு வோருக்கு அவர்களுடைய (முழு) விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) (இனாமாய்) செய்தனுப்பப்படும்.

பேனா 1-க்கு ரூ. 2—10—0 கேட்லாக் இனும்.

ஜீ. எஸ், அண்டு கோ.

8, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, (மதராஸ்.)



# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.



குறைந்த விலை! நிறைந்த பலன்!

# அத்புத ஆருடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4அணு அதிகம் வி. பி. வேறு. கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து:- இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர்த் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்காதோஷங்களும் கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும் சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி. வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும். வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்.

பலாசூர் N. ராமநாத சாஸ்திரியார்

அடையாறு லைப்ரேரி பண்டிதர்,

மைலாப்பூர்—சென்னை

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதுகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் துகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ருஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு

முகாம் :—பாலவாக்கம்

ஊத்துக்கோட்டை போஸ்ட்டு

செங்கல்பட்டு ஜில்லா.

---


## டாக்டர் 'ஜீ' பீ என்பவரின் சுகந்த மூக்குத்தூள்!

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது சதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

புலி மார்க்

REGISTERED TRADE MARK

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

### குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்


தபாற் பெட்டி நெ. 510 [illegible] டவுன்,

விலாசம் "மெடிகே[illegible]" சென்னை

80-ஆண்டு காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.



அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

# ஷண்முகம்

# பட்டணம்பொடி

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்டு பாக்ஸ் 140, மதுரை**

80 வருஷக்காலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி வெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில்பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும்நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இணையப்பெற்று காதை ஏஜெண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து, உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம்பொடியைவாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்

அசல் ஷண்முகம் பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ. 4 4 0. — இரண்டாந்தரம் ரூ. 3 4 0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை. | தபால்கூலி. | பாக்கிங். | தொகை. |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |

# அமிர்தாஞ்சனம்




முடக்குவாதம், இடுப்புவலி, தலைவலி,

பூட்டுப்பிடிப்பு, சுளுக்கு, இருமல், ஜுரம், வீக்கம்

முதலிய அனேக வியாதிகளுக்கு

## கைகண்ட ஔஷதம்.

ஒரு புட்டி 10. அணா.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்.


Published by Mr. A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd. Madras
Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS
CHINGLEPUT